## முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**Ar.O.P No.18/2021**

**ம.சா. 2**

நாள்: 06.01.2024

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 06ம் நாள் மனுதார்/எதிர்மனுதார் சாட்சியாகிய திரு.உலகநாதன் என்பவரின் வாக்குமூலம் 1989ஆம் ஆண்டு சட்டம் 44ம் விதி 4ம் பிரிவின் கீழ் திரு. எஸ். குமரகுரு, பி.எல்., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உலகநாதன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

<u>ஆவணங்கள்</u>

1) சாட்சிக்குண்டான ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதன் நகல் ம.சா.ஆ–7,
2) மனுதாரர் நிலத்திற்குண்டான கணினி பட்டா ம.சா.ஆ–8,
3) மனுதாரருடைய கைப்பற்றப்பட்ட நிலத்திற்குண்டான புலப்பட நகல் ம.சா.ஆ.9 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதன் நகல்

குறியீடுசெய்யப்படுகிறது.)

4) 15.12.2004ம் தேதி காசிநாதன் என்பவர் மனுதாரர் வரதராஜன் என்பவருக்கு ஏற்படுத்திக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் ஆன்லைன் நகல் ம.சா.ஆ.10 ( எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணத்திற்கும் சாட்சிக்கும் சம்மந்தம் இல்லை என்றும், மேலும் மேற்படி ஆவணத்தில் சாட்சியானவர் தரப்பினர் இல்லை என்பதாலும் குறியீடு செய்ய முடியாது என எதிர்மனுதாரர் ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டு ஆவணத்தின் தன்மைக்கேற்ற பின்னிட்டு முடிவு செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் மேற்படி ஆவணமான ம.சா.ஆ10 குறியீடு செய்யப்படுகிறது.)

**1 மற்றும் 2 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் சர்வே எண் எனக்குத் தெரியாது. என்னுடைய நிலத்திற்குண்டான சர்வே எண்.213 ஆகும். அரசாங்க ரோட்டிலிருந்து என்னுடைய நிலம் தான் துாரம்.ரோட்டிலிருந்து ஆட்சேபம் செய்யப்பட்ட நிலமானது 500 மீட்டர் தொலைவு இருக்கும். எனக்கு கோரிக்கைதாரர் சித்தப்பா மகன் ஆவார். இன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள 4வது ஆவணமானது கோரிக்கைதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். ஆர்ஜிதம் நிலத்தின் சந்தை மதிப்பு என்பது வாங்குவோர் மற்றும் விற்பவர் பொறுத்து ஒன்றுக்கொன்று மாறுபடும் என்றாலும் சரிதான். ஆனால் சந்தைமதிப்பானது நாளுக்கு நாள் கூடிக்கொண்டிருக்கும். மேற்படி நிலமானது நஞ்சை நிலம் என்பதால், அதன் மதிப்பு கூடுவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. ஆனால் அந்த இடம் நஞ்சை நிலமாகும். கோரிக்கைதாரர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நான் இன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்கள்அனைத்தும் ஆட்சேபம்

செய்யப்பட்ட நிலத்தின் சந்தை மதிப்பு அதிகமாக காட்டுவதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.9 இல் நான் சொல்லும் ஆட்சேபம் செய்யப்பட்ட நிலமே காட்டப்படவில்லை என்றால் சரிதான். அதனால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .